**எல்பிடிய பிரதேச சபை**

**காலி மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 09 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஒக்தோபர் 25 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு எல்பிடிய பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்குகளைத் தயாரிக்கும் போது சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 15,870,458 பெறுமதியான கடன் தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் கடன் கொடுத்தோர் மீதியாக கணக்ககள் தயாரிக்கப்பட்ட திகதி வரையான முன்னைய ஆண்டின் கடன் கொடுத்தோருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 530,670 பெறுமதியான மொத்தக் கொடுப்பனவுகள் மாத்திரம் தவறுதலாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) உள்ளூராட்சிமன்ற ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 7,479,894 ஆன பங்களிப்புத்தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 163,000,000 நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(உ) திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 10 உத்தியோகத்தர்களின் 296 சம்பளமற்ற விடுமுறை நாட்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 290,400 வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டள்ள 07 கணக்கு விடயங்கள் மற்றும் அவற்றிற்கு உரிய துணைப் பதிவேடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிக்கைகளில் காட்டப்பட்டள்ள மீதிகளுக்கிடையே ரூபா 3,610,186 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதி வரை பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 23,535,622 ஆகக் காணப்பட்டதுடன், அதில் ரூபா 19,468,148 பெறுமதியான மீதி 2012 ஆம் ஆண்டிற்கு முன்பு தொடக்கம் காணப்பட்டதுடன், அம்மீதிகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 3,199,601 ஆன நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதிகளையும் ரூபா 801,455 ஆன பொது விநியோகக் கடன்கொடுத்தோர் மீதிகளையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 3,472,822 கூட்டுத்தொகையான வைப்புக்கள் மற்றும் ரூபா 280,156 பெறுமதியான கிடைக்க வேண்டிய ஆதனக் கடன் வட்டி என்பன தொடர்பான பட்டியல்கள், ரூபா 684,000 பெறுமதியான இழப்பீடு வழங்குவதற்குரிய முதலீடுகளுக்கான பட்டோலைகளும் மற்றும் வைப்புச் சான்றிதழ்களும், ரூபா 18,116,095 பெறுமதியான உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடனிற்குரிய ஒப்பந்தம் போன்ற தகவல்கள் சமர்ப்பிக்காத காரணத்தினால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாமல் இருந்தன.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இனங்காமை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571(1)(2) | 2015 திசம்பர் 31 ஆம் திகதிக்கு காலவதியான ரூபா 212,875 பெறுமதியான 05 வைப்பு மீதிகள் காணப்பட்ட போதிலும், அது தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 | சபைக்குச் சொந்தமான 18 வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்குச சமர்ப்பிக்கப்படவில்லை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 21,428,007 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,257,216 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 13,170,791 அதிகரிப்பு காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீண்டெழும் வருமானம் வருமானத்தில் 71 சதவீதம் மீண்டெழும் செலவினம் காணப்பட்டமையினால் மீண்டெழும் வருமானத்திற்கு ஒப்பாக மீண்டுவரும் செலவினம் உயர் மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் சபையின் வருமான மானியம், சுய வருமான ஈட்டல்கள், மீண்டெழும் செலவினங்கள் என்பனவற்றின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான மானியம் | சுய வருமான ஈட்டல் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய உழைப்பு வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 73,874,936 | 40,194,082 | 33,680,854 | 52,446,928 | 18,766,074 |
| 2014 | 53,871,510 | 31,406,984 | 22,464,526 | 45,614,293 | 23,149,767 |
| 2013 | 43,823,012 | 21,120,853 | 22,702,159 | 37,816,525 | 15,114,366 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையின் மீண்டுவரும் செலவினம் தொடர்ச்சியான வேகத்தில் கருத்திற் கொள்ளக்கூடியளவில் அதிகரித்திருந்த போதிலும். அந்நிலைமையை இனங்கண்டு செலவினத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் சபையின் சுய வருமானமீட்டலை விஞ்சி ரூபா 18,766,074 பெறுமதியான மீண்டுவரும் செலவினம் காணப்பட்டது.

(iii) சபைக்கு வருமான மானியம் கிடைக்காமல் இருந்தால் சபையின் வருமானத்திலிருந்து மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்வதற்கு எந்தவகையிலும் இயலுமையும் இல்லையென தென்பட்டது.

(இ) நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் மீண்டுவரும் வருமானம் மற்றும் செலவினத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நான்கு நிகழ்ச்சித்திட்டங்களிலும் வருமானத்தை விஞ்சிய செலவினம் காணப்பட்டது.

(ஈ) மீண்டுவரும் வருமானத்தை விஞ்சி ரூபா 12,551,784 மூலதன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், சபையின் சுய வருமானத்தில் நூற்றிற்கு 30 சதவீதமேனும் மூலதனச் செலவினமாக மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்காக கிடைக்க வேண்டியிருந்த ரூபா 163,000,000 தொகையை கணக்குகளில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டில் நடைமுறைச் சொத்துக்கள் 74 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், அது சபையின் தொழிற்படு மூலதன அதிகரிப்பில் நேரடியாகத் தாக்கம் செலுத்தியிருந்தது.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 வீத வரி

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த வீதவரி மீதி ரூபா 9,162,732 ஆகக் காணப்பட்ட போதும், நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.4.2 ஏக்கர் வரி

மீளாய்வாண்டில் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 376,687 நிலுவை ஏக்கர் வரி மீதியில் ஆண்டினுள் ரூபா 50,941 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.4.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,175,650 உம் முத்திரைக் கட்டணம் ரூபா 11,388,824 உம் கிடைக்க வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மைத்திரிகம பொது மயானத்தில் புதிய தகனசாலையை நிர்மாணிப்பதற்காக 2015 ஆம் ஆண்டில் மாகாண சபையிடமிருந்து ரூபா 5,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், 2016 யூலை 31 ஆந் திகதி வரை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவியணியினர் திட்டத்திற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட 02 பதவிகளில் காணப்பட்ட 05 வெற்றிடங்களை நிரப்புவதற்காக அல்லது சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த 04 மேலதிக உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை முறைப்படுத்திக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

2010 மார்ச் 17 ஆம் திகதி உள்நாட்டு அபிவிருத்தி மற்றும் கடன் நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடனை உரிய முறைப்படி செலுத்தப்படாமையினால் கடன் தொகையை மீள் கட்டமைப்புக்குட்படுத்திய போது ஏற்பட்ட ரூபா 233,775 ஆன வட்டியைச் செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது.

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) உள்ளூராட்சிமன்ற உதவி ஆணையாளரின் மற்றும் உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் பரிந்துரைகள், வழிகாட்டல்கள் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் இன்றி 2015 ஜுலை 08 ஆம் திகதி ரூபா 100,000 தொகை பிரதேச சபையின் உள்ளூராட்சிமன்ற ஊழியர் நலன்புரி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு தேவையான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132(ஒ), (ஓ) பிரிவுகளுக்கு இணங்காத வகையில் 08 சந்தர்ப்பங்களில் ரூபா 818,500 தொகையான செலவினமும் 03 சந்தர்ப்பங்களில் சபை நிதியத்திலிருந்து ரூபா 147,180 விழாச் செலவினமாகவும் செலவிடப்பட்டிருந்தன.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132 பிரிவிற்குக் கொண்டுவராத 7 வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலாக்களிற்குத் தலைவர் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் 06 பேரிற்குத் தங்குமிடம் மற்றும் உணவு வழங்குவதற்காக சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிக்கையில் அதனைக் கருத்திற் கொள்ளாது ரூபா 1,304,490 இடைநேர் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. மூன்று உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதற்காக முறையாக கடமை விடுமுறை அங்கீகாரத்தையும் பெற்றிருக்கவில்லை.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

PF-7406 இலக்க கெப் வண்டி 2015 யூலை 30 ஆம் திகதி நடைபெற்ற விபத்துத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட பரிசீலனை அறிக்கையின் விதந்துரைகளுக்கு அமைய, மேற்படி விபத்து இதற்கு முன்னர் நடைபெற்ற ஒன்று என உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக, விபத்துத் தொடர்பான உரித்துக் கொடுப்பனவை வழங்குவதற்கு காப்புறுதிக் நிறுவனம் மறுப்புத் தெரிவித்திருந்தது. எனினும், பரிசோதனையொன்று நடாத்தி ஏற்பட்டிருந்த நட்டத்தை மதிப்பிட்டு பொறுப்புக் கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 செயற்திட்ட தாமதம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தினுள் 09 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காகக் கிடைத்திருந்த ரூபா 405,000 தொகை உரிய செயற்றிட்டத்திற்காகப் பயன்படுத்தப்படாமல் விளைவற்ற வகையில் வைத்திருக்கப்பட்டிருந்தன.

(ஆ) மாகாண திட்டமான அபிவிருத்தி நிதியத்தின் கீழ் கஹதுவ அரலியவத்தை வீதி அபிவிருத்திக்காக ரூபா 500,000 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 யூன் 20 ஆம் திகதி வரை அந்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையினால் செயற்படுத்தப்படும் பிளிசரு செயற்திட்டத்திற்காக மத்திய சூழல் அதிகாரசபையிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 1,252,311 தொகையில் ரூபா 10 இலட்சம் செலவிடப்பட்டு 2010 ஆம் ஆண்டில் கழிவுகளை வேறுபடுத்துவதற்காகக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 யூன் 23 ஆம் திகதி வரை அச்செயற்றிட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கிய செலவின விடயமொன்றில் ரூபா 800,100 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும், 05 செலவின விடயங்களில் ரூபா 11,625,904 கூட்டுத்தொகையான சேமிப்புயும் மேலும் ஒரு செலவின விடயத்திறல் வரையரையை விஞ்சி ரூபா 19,502 தொகையான செலவினமும் 05 வருமான விடயங்களில் இலக்கினை அடையாத ரூபா 3,687,295 வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளுராட்சி ஆணையாளரது (தென்மாகாணம்) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.வ.வே எனும் இலக்கமுடைய சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சபை வளவில் துருப்பிடித்தவாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 05 வாகனங்களை 2015 யூலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) வாகனக் கட்டுப்பாடு